# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை– 2018

| தரம் - 7 | குடியியற்கல்வி | நேரம் : 2.00 |
|---|---|---|

சுட்டெண் ........................

### பகுதி – I

❖ 1 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.

01. மனிதன் பிறந்ததும் முதலில் உறுப்பினராவது.
   1) அரசு 2) குடும்பம் 3) சமூகம் 4) அரசாங்கம்

02. ஒருவரின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் அம்சம் எது?
   1) நடை 2) உடை 3) ஆடை அணிகலன் 4) கைரேகை

03. எமது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அவசியமற்றது.
   1) குடும்பம் 2) பாடசாலை 3) போதைப்பொருள் 4) நல்ல நண்பர்கள்

04. அப்பாவின் தங்கை எவ்வாறு அழைப்பீர்?
   1) சித்தி 2) பெரியம்மா 3) மாமி 4) மச்சான்

05. சமூகத்தின் மிகச் சிறிய அலகு எது?
   1) குடும்பம் 2) ஆலயம் 3) பாடசாலை 4) கிராமம்

06. அவசர தொலைபேசி இலக்கம் எது?
   1) 1919 2) 1928 3) 1939 4) 1949

07. அரசியல் உரிமைகளில் ஒன்று
   1) வாழும் உரிமை 2) கல்வி கற்கும் உரிமை
   3) சமயத்தை பின்பற்றும் உரிமை 4) வாக்களிக்கும் உரிமை

08. உமது சட்டம் சார்ந்த கடமைகளில் ஒன்று
   1) சுயமரியாதை 2) பெற்றோரை மதித்தல்
   3) வரி செலுத்துதல் 4) ஆசிரியரை மதித்தல்

09. தேசியக் கொடியில் பச்சை நிறம் குறித்து நிற்பது.
   1) தமிழர் 2) சிங்களவர் 3) இஸ்லாமியர் 4) பறங்கியர்



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

10. இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர்.

1) மு.நல்லதம்பி
2) ஆனந்தசமரக்கோன்
3) D.S சேனநாயக்கா
4) S. நடேசன்

11. மூவினத்தவர்களாலும் வழிபடும் இடம்.

1) கதிர்காமம்
2) சிவனொளிபாதமலை
3) மடுத்தேவாலயம்
4) நல்லூர்

12. ஐரோப்பியரின் வருகையால் இலங்கையில் பரப்பப்பட்ட மதம்.

1) இஸ்லாமிய மதம்
2) இந்து மதம்
3) கிறிஸ்தவ மதம்
4) பௌத்த மதம்

13. பராக்கிரம சமுத்திரம் காணப்படும் இடம்.

1) பொலன்னறுவை
2) அனுராதபுரம்
3) குருநாகல்
4) திருகோணமலை

14. எமது நாட்டின் இலச்சினையில் நெற்கதிர் உணர்த்துவது?

1) செழிப்பு
2) துய்மை
3) சமத்துவம்
4) அன்பு

15. இலங்கையின் தேசிய மரம் எது?

1) பனைமரம்
2) நாகமரம்
3) அரசமரம்
4) நீலோற்பலம்

Education கல்வி අධ්‍යාපන

❖ 16 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு இடைவெளி நிரப்புக.

[அரசவைபவம், சிகிரியா, சித்திரைப் புத்தாண்டு, தேசியஅடையாளஅட்டை, காட்டுக்கோழி]

16. எமது பண்பாட்டு சின்னங்களின் ஒன்றாக ......................... விளங்குகின்றது.

17. தேசியக் கொடி ................................ ஏற்றப்படும்.

18. எமது நாட்டின் தேசியப்பறவை ......................... ஆகும்.

19. தமிழர்களாலும், சிங்களவர்களாலும் கொண்டாடப்படுவது......................... ஆகும்.

20. அரசஇலச்சினை......................... காணப்படும்.

(20x2=40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

- முதலாம் வினா உட்பட ஏனைய நான்கு வினாக்களுக்கு விடை தருக.
- மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01.

i) மூன்றாம் தவணையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு ஒன்று தருக.

ii) இக் கணிப்பீட்டை மேற்கொள்ளப் பயன்படுத்திய தர உள்ளீட்டுப் பொருட்கள் மூன்று தருக.

iii) இக்கணிப்பீட்டினால் கிடைக்கப்பெற்ற நன்மைகள் நான்கு தருக.

iv) இக் கணிப்பிட்டை மேற்கொள்ளும் போது எதர்நோக்கிய பிரச்சினைகள் மூன்று தருக.

(2+3+4+3=12 புள்ளிகள்)

02.

i) குடும்பத்தின் வகைகளைக் குறிப்பிடுக.

ii) குடும்பத்தினால் கிடைக்கும் பயன்கள் மூன்று தருக.

iii) சமூகத்தில் காணப்படும் நிறுவனங்கள் நான்கு தருக.

iv) சமூகத்தில் காணப்படும் தீய அம்சங்கள் மூன்று தருக.

(2+3+4+3=12 புள்ளிகள்)

03.

i) நீர் ஓய்வு நேரத்தைக் கழிக்கும் விதம் இரண்டினைத் தருக.

ii) நீர் எதிர் கொள்ளும் சவால்கள் மூன்று தருக.

iii) மனவெழுச்சிகள் நான்கு தருக.

iv) மனவெழுச்சியைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் மூன்று தருக.

(2+3+4+3=12 புள்ளிகள்)

04.

i) தரவுகளின் அவசியங்கள் இரண்டு தருக.

ii) உமக்கு இருக்கும் உரிமைகள் மூன்று தருக.

iii) உமது கடமைகள் நான்கு தருக.

iv) சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதால் ஏற்படும் தீமைகள் மூன்று தருக.

(2+3+4+3=12 புள்ளிகள்)

05.

i) இலங்கையில் காணப்படும் கலாசார வகைகளில் இரண்டினைத் தருக.

ii) கலாசாரத்தில் உள்ளடங்கும் விடயங்கள் ஐந்து தருக.

iii) தேசிய தனித்துவத்தை வெளிப்படுத்தும் அம்சங்கள் மூன்று தருக.

iv) பன்மைக்கலாசாரத்தில் ஒற்றுமையாக வாழ்வதன் நன்மைகள் இரண்டு தருக.

(2+5+3+2=12 புள்ளிகள்)



kalvi.lk

06.

i) ஒருவரிடம் காணப்படும் உயர் பண்புகள் இரண்டு தருக.

ii) எமது நல்லொழுக்கம் சார்ந்த விடயங்கள் நான்கு தருக.

iii) இலங்கையில் காணப்படும் கலாசார சின்னங்கள் நான்கு தருக.

iv) தேசியக் கொடி ஏற்றும் போது எவ்வாறு நிற்க வேண்டும்?

(2+4+4+2=12 புள்ளிகள்)

07.

i) அயலவர்கள் எமக்கு ஒத்துழைப்பு வழங்கும் சந்தர்ப்பம் இரண்டு தருக.

ii) உமது குடும்பத்துடன் கொண்டாடும் விழாக்கள் மூன்று தருக.

iii) பொதுசன ஊடகங்கள் நான்கு தருக.

iv) நீர் எதிர் கொண்ட சவால் ஒன்றை குறிப்பிட்டு அதனை வெற்றிகொண்ட விதத்தை எழுதுக.

(2+3+4+3=12 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

## தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457